03.01.2020 Hmop 1 of 2019

ம.சா.1 கன்னிராஜ்

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டார். )

குறுக்குவிசாரணை எதிர்மனுதாரர் தரப்பில்

நான் நகை தொழில் செய்து வருகிறேன். அது தவிர நான் வங்கியிலும் நகை மதிப்பீட்டாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றால் சரிதான். எனக்கு நாள் ஒன்றுக்கு ரூ.400 முதல் ரூ.500/-வரை வருமானம் வரும். எனக்கும் எதிர்மனுதாரருக்கும் நடந்த திருமணத்தின் போது ஒரு பவுன் மோதிரம் போட்டார்கள் என்றால் சரியல்ல 1/2பவுன் போட்டார்கள். திருமண செலவிற்காக ரூ.20ஆயிரம் பெண் வீட்டில் இருந்து கொடுத்தார்கள் என்றால் சரிதான். திருமணத்தின் போது எதிர்மனுதாரர் 16 பவுன்சவரன் தங்க நகைகள் அணிந்து வந்தார் என்றால் நான் சரியாக மதிப்பீடு செய்யவில்லை. எதிர்மனுதாரர் நகை போட்டு வந்தார் என்னென்ன நகை என்று எனக்கு சரியாக தெரியாது. எதிர்மனுதாரர் பெற்றோர் வீட்டில் இருந்து வீட்டிற்கு தேவையான கட்டில், பீரோ, மக்ஸி,. கிரைண்டர் கொண்டு வந்தார் என்றால் சரிதான். அவைகள் தற்போது என்னிடம் உள்ளது என்றால் சரிதான். நகைகள் முழுவதும் என்னிடம் இல்லை. ஒரு மாலையும்,ஒரு நெக்லஸ்ம் உண்டு. அவைகள் சுமார் 7பவுன் இருக்கும். எதிர்மனுதரருக்கு சொந்தமான மோதிரமும், இரண்டு ஜோடி கம்மலும் என்னிடம் தான் உள்ளது என்றால் சரியல்ல. திருமணத்திற்கு பின்பு நான் என் வளர்ப்பு தாய் வீட்டில் தான் வசித்து வந்தேன் என்றால் எனக்கு அப்பா கிடையாது என்பதால் என் சித்தப்பா வீட்டில் வசித்து வந்தேன். எதிர்மனுதாரரின் பெற்றோரும் என் திருமணத்திற்கு முன்பே இறந்து விட்டார்கள் என்றால் சரிதான். திருமணம் என் வளர்ப்பு தாய், என்

சித்தப்பா, என் அம்மா, மற்றும் எதிர்மனுதாரரின் அண்ணன் ஆகியோர்கள் தான் பேசி முடித்தார்கள் என்றால் சரிதான். திருமணத்திற்கு பின்பு தலைதீபாவளிக்கு என்னுடைய வீட்டில் இருந்து எதிர்மனுதாரரிடம் மோதிரம் கேட்டார்கள் என்றால் சரிதான். தலைதீபாவளிக்கு எதிர்மனுதாரர் வீட்டில் இருந்து துணி எடுதது கொடுத்தார்கள் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் வீட்டில் வசதி குறைவு என்பதால் நான் கேட்ட மோதிரம் கொடுக்க முடியவில்லை என்பதால் நான் மோதிரம் எதுவும் கேட்கவில்லை. என் மனைவி கருவூற்றிருந்த போது அவரை அவரது அண்ணன் மற்றும் அவரது அண்ணன் மனைவி தான் மருத்துவமனைக்கு அழைத்து சென்று மருத்துவ செலவு செய்தார்கள் என்றால் திருமணமான பிறகு எதிர்மனுதாரர் என்னுடன் சேர்ந்து 28நாட்கள் தான் குடித்தனம் நடத்தினார். அதன்பிறகு எதிர்மனுதாரரின் அக்காவும், சித்தியும் அழைத்து சென்றார்கள். மனைவி கருத்தரித்து இருப்பது வெளியே சொந்தக்காரர்கள் சொல்லி தான் நான் கேள்விபட்டேன். நான் மருத்துவமனைக்கு எதுவும் அழைத்து செல்லவில்லை. நான் எதிர்மனுதாரரை கருப்பாக இருக்கிறார் என்று குறை சொன்னேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் கருப்பாக இருப்பதால் எதிர்மனுதாரரை கருவூற்றிருந்த போது அவரை மருத்துவமனைக்குஅழைத்து செல்லவில்லை என்றால் சரியல்ல. நான் மருத்துவமனைக்கு அழைத்து சென்ற போது கர்ப்பபையில் கட்டி இருப்பதாக மருத்துவர்கள் சொன்னார்கள் ஆகையால் எதிர்மனுதாரர் வீட்டில் இருந்து அதனை சரி செய்து திரும்ப அனுப்பி வைப்பதாக சொன்னார்கள். நான் திருமணமாகி 25வது நாள் மருத்துவமனைக்கு எதிர்மனுதாரரை ஏ.வி.எம்.மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். அதற்கான மருத்துவ பில்கள் எல்லாம் நான் வைக்கவில்லை. எதிர்மனுதாரர் தனக்கு தேவைப்படுவதாக எடுத்து சென்றார். நான் எதிர்மனுதாரரை மருத்துவமனைக்கு அழைத்து செல்லவில்லை என்றால் சரியல்ல. என் மனைவிக்கு குழந்தை பிறந்த பிறகு நான் மருத்துவமனைக்கு சென்று பார்க்கவில்லை. அதற்கு காரணம் எந்த

மருத்துவமனையில் வைத்து குழந்தை பிறந்தது என்று எனக்கு தெரியாது. குழந்தை பிறந்த விபரத்தை எதிர்மனுதாரர் வீட்டில் இருந்து போன் செய்து சொன்னார்கள் என்றால் சரியல்ல. சொந்தக்காரர்கள் மூலம் தான் தெரியும். எதிர்மனுதாரர் குழந்தை பிறந்த விபரத்தை எனக்கு போன் மூலம் தகவல் சொல்லியும் நான் வேண்டுமென்றே போய் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. குழந்தை பிறந்த பிறகு என்னுடன் சேர்ந்து வாழ வேண்டும் என்று என் மனைவி மற்றும் அவரது அண்ணனும் வந்தார்கள் என்றாலும் நானும், என் சித்தியும் சேர்ந்து அவர்களை அடித்து விரட்டிவிட்டோம் என்று சொன்னால் சரியல்ல. என் மனைவியை நானும், என் சித்தியும் சேர்ந்து அசிங்கமாக பேசி வந்தோம் என்று சொன்னால் சரியல்ல. என் மனைவி என்னுடன் 28நாட்கள் சேர்ந்து இருந்ததாக சொல்லப்படும் நாட்களில் என்னை எவ்விதத்திலும் கொடுமைப்படுத்தவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ ஆசைப்படுகிறார் நான் சேர்ந்து வாழ தயாரா என்றால் எதிர்மனுதாரர் சேர்ந்து வாழ வேண்டுமென்று நான் தூத்துக்குடி மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் அதற்கு எதிர்மனுதாரர் உடன்படவில்லை. ஆகையால் 5வருடம் பிரிந்து இருப்பதால் சேர்ந்து வாழ நான் விருப்பப்படவில்லை. நான் தூத்துக்குடி காவல்நிலையத்தில் சேர்ந்து வாழ கோரி கொடுத்த புகார் சம்பந்தமான விசாரணைக்கு நான் ஆஜராகவில்லை என்றால் சரியல்ல. நான் கொடுத்த புகாரின் நகல் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் மனைவி இந்து சம்பிரதாய வழக்கப்படி கணவருக்கு செய்யவேண்டிய சம்பிரதாயங்களை செய்து வருகிறார் என்றாலும் நான் இந்து தர்மத்தை மீறி எதிர்மனுதாரரை பிரிந்து விவாகாரத்து கோருவதற்கு ஆசைப்படுகிறேன் என்றால் சரியல்ல. இந்து முறைப்படி என் மனைவி என்னுடன் சேர்ந்து வாழ ஆசைப்படுவதால் போதுமான காரணமின்றி என் மனைவியை விவாகரத்து செய்ய முடியாது என்றால் என் மனைவி இந்துமுறைப்படி என்னுடன் சேர்ந்து

வாழாததால் எனக்கு விவாகரத்து கிடைக்க வேண்டும். நான் பொய்யான விபரம் கூறி மனு  தாக்கல் செய்துள்ளதால் என் வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்று சொன்னால் சரியல்ல.